**எங்கள் ஆட்சியில் ரூ.600 கோடியில் தீட்டப்பட்ட ‘வைகை’ கூட்டுக் குடிநீர்த் திட்டத்தை கிடப்பில் போடாமல் உடனே நிறைவேற்றுக!**

# கழக ஆட்சியில் இரண்டே ஆண்டுகளில் 2 இலட்சம் வீடுகள் கட்டிக் கொடுத்தோம்!

## சட்டப் பேரவையில் — முன்னாள் அமைச்சர் இ.பெரியசாமி பேச்சு!

சென்னை, ஆக. 23-

**சட்டப் பேரவையில், ஊரக வளர்ச்சித் துறை மானியக் கோரிக்கை மீதான விவாதத்தில் கலந்துகொண்டு பேசிய, கழக துணைப் பொதுச் செயலாளரும் முன்னாள் அமைச்சருமான இ.பெரியசாமி அவர்கள், “கழக ஆட்சியில் இரண்டே ஆண்டுகளில் 2 இலட்சம் வீடுகள் கட்டிக் கொடுத்தோம்” என பெருமிதத்துடன் குறிப்பிட்டார்.**

சட்டப் பேரவையில் அவர் பேசியதாவது:-

பேரவைத் தலைவர் அவர்களே,

இந்த அவையிலே 1989-ஆம் ஆண்டில் வருவதற்கு எனக்கு வாய்ப்பளித்து, தொடர்ச்சியாக ஆத்தூர் சட்டமன்றத் தொகுதியில் 9 முறை போட்டியிடுவதற்கும் வாய்ப்பளித்து, என்னை 7 முறை வெற்றி பெறச்செய்து, இந்த அவையில் என்னை 3 முறை அமைச்சராக்கி, பல்வேறு பொறுப்புகளை வழங்கி வளர்த்தெடுத்த என்னுடைய உயிரினும் மேலான தலைவர், கழகத்தினுடைய முன்னாள் தலைவரும் முன்னாள் முதலமைச்சருமான, தமிழகத்தி னுடைய சிற்பி, எங்களுடைய உயிரினும் மேலான தலைவர் முத்தமிழறிஞர் கலைஞர் திசை நோக்கி நான் முதற்கண் வணங்குகின்றேன்.

இரண்டாவதாக, நம்முடைய இந்தியாவில் அனைத்துத் துறைகளிலும் முதல் மாநிலமாக உயர்த்தி, தமிழகத்தை தலைநிமிரச் செய்த, தமிழகத்தின் உரிமைகளுக்காக மற்ற மாநிலங்களை விட குரல்கொடுத்து, அந்த உரிமைகளைப் பெறுவதற்காக பல இழப்புகளை கடந்த 5 ஆண்டு காலத்தில் சந்தித்த எங்கள் தலைவர், முன்னாள் முதலமைச்சர் தளபதி அவர்களுக்கும் என்னுடைய நன்றியையும் வணக்கத்தையும் தெரிவித்துக்கொள்ள விரும்பு கின்றேன்.

அவரைத் தொடர்ந்து இன்றைக்கு இளை ஞரணியின் செயலாளராகவும், சட்டமன்றத்தினுடைய எதிர்க்கட்சித் தலைவராகவும் தேர்வு செய்யப்பட்டு, இன்றைக்கு மக்கள் பணியில் மிகச் சிறப்பாக பணி செய்து கொண்டிருக்கின்ற எதிர்க்கட்சித் தலைவர் தம்பி உதயநிதி ஸ்டாலின் அவர்களுக்கும் என்னுடைய வணக்கத்தைத் தெரிவித்துக் கொள்ள விரும்புகின்றேன்.

அவையில் இருக்கின்ற அனைத்து உறுப்பினர்களுக்கும் மற்றும் அமைச்சர் பெருமக்களுக்கும், முதலமைச்சருக்கும் மற்றும் நம்முடைய பேரவைத் தலைவர் அவர்களுக்கும் என்னுடைய நன்றியையும் வணக்கத்தையும் தெரிவித்துக் கொள்ள விரும்புகின்றேன்.

### கலைஞர் கனவு இல்லத் திட்டம்!

குறிப்பாக, ஊரக வளர்ச்சித்துறை இன்றைக்கு தமிழகத்தினுடைய கிராமப்புறத்தினுடைய வளர்ச்சியை உள்ளடக்கிய துறை. இதிலே குறிப்பாகச் சொல்ல வேண்டும் என்றால், பல உள்ளாட்சியிலே பல திட்டங்கள் இன்றைக்கு வருகின்றது. இருந்தாலும் கடந்த 5 ஆண்டு காலத்திலே மக்கள் மனதில் நீங்கா இடம்பெற்ற திட்டம் கலைஞரினுடைய கனவுத் திட்டம். கலைஞருடைய கனவு இல்லத் திட்டம் தான் மக்களின் மனதில் இன்றைக்கு நிலைத்திருக்கிறது.

குறிப்பாகச் சொல்ல வேண்டும் என்றால், 23-24, 24-25-லே அவர்கள் இன்றைக்கு ஆண்டிற்கு 1 லட்சம் வீடுகள் கட்ட வேண்டும் என்று முன்னாள் முதலமைச்சர் தலைவர் தளபதி அவர்கள் முடிவு செய்து, முதல் ஆண்டிலேயே 1 லட்சம் வீடுகள் 3,500 கோடி ரூபாயில் அறிவிக்கப்பட்டு, அந்தத் திட்டங்கள் எல்லாம் நிறைவேற்றி முடிக்கப்பட்டன. இதுவரைக்கும் எந்தக் காலத்திலும் இல்லை.

இங்கே கூட நம்முடைய கல்வித்துறை அமைச்சர் அவர்கள் நேற்று சொன்னார்கள். நீங்கள் வந்து பசுமை வீடு திட்டத்தை மாற்றிவிட்டீர்கள், அதேபோல் நாங்களும் காலை உணவுத் திட்டத்தை மாற்றியிருக்கிறோம் என்று கூட சொன்னார்கள்.

ஆனால், தமிழகத்தினுடைய அரசியல் வரலாற்றில் ஏழை எளிய மக்கள் குடிசையிலே வாழ்ந்த மக்களுக்காக, குடிசையை அகற்ற வேண்டும், 15 லட்சம் குடிசை இருக்கு, அவையெல்லாம் அகற்ற வேண்டும் என்று 1971-லே எங்களுடைய முன்னாள் முதல்வர் முத்தமிழறிஞர் கலைஞர் அவர்கள் 1 லட்சம் கான்கிரீட் வீடுகளை இந்தியாவிலே எந்த மாநிலத்திலும் இல்லாத அளவிற்கு ஏழை எளிய மக்களுக்கு, குடிசையில் வாழக்கூடிய மக்களுக்கு 1 லட்சம் வீடுகளை அன்றைக்கு கட்டிக் கொடுத்து இந்தியாவிற்கு வழிகாட்டினார்கள்.

அதன் தொடர்ச்சியாகத்தான் முன்னாள் முதல்வர் தளபதி அவர்கள், இங்கே நாம் தரமான வீடுகளைக் கட்டித் தர வேண்டும் ஏழை எளிய மக்களுக்கு, குடிசையிலே வாழ்கின்ற மக்களுக்கு, 8 லட்சம் வீடுகளை 2030-க்குள் கட்டிக் கொடுக்க வேண்டும் என்று சூளுரைத்து, இதே அவையிலே முதல் ஆண்டிலே 1 லட்சம் வீடு வழங்கப்பட்டு கட்டி முடிக்கப்பட்டது. இரண்டாவது ஆண்டிலே 3,500 கோடி வழங்கி அந்தத் திட்டத்தைத் தொடங்கி கிட்டத்தட்ட இப்போது 80% பணிகள் முடிந்து 80,000 வீடுகள் வரை கட்டி முடிக்கப்பட்டிருக்கிறது, மற்றவைகள் கட்டும் பணியில் இருக்கிறது.

### இரண்டே ஆண்டுகளில் 2 லட்சம் வீடுகள்!

ஆக, இரண்டே ஆண்டுகளில் 2 லட்சம் வீடுகளை முடித்திருக்கிறோம். மூன்றாம் ஆண்டு 26 ஜனவரியில் இன்னும் 1 லட்சம் வீடு கட்டுவதற்காக அறிவிப்பு செய்யப்பட்டு, கிட்டத்தட்ட 36,000 பேருக்கு வீடு கட்ட அனுமதி வழங்கி, அதிலே கிட்டத்தட்ட 8,000 பேர் இதுவரை பல்வேறு நிலையிலே அந்த வீடுகளை, கலைஞர் கனவு இல்லத்தை இன்றைக்கு கட்டிக் கொண்டிருக்கிறார்கள். இதுதான் எதார்த்தமான உண்மை.

இன்றைக்கு... உள்ளாட்சித்துறை அமைச்சர் கிராமங்களிலே கலைஞர் வீடு வழங்கும் திட்டத்தைப் பார்த்திருப்பார். இன்றைக்கு உங்கள் ஆட்சி வந்தவுடனே நீங்கள் அந்தத் திட்டத்தினுடைய பெயரை கலைஞர் கனவு இல்லத்தை மாற்றி விட்டீர்கள், பரவாயில்லை. நீங்கள் வெற்றி வீடு கட்டும் திட்டம் என்று மாற்றியிருக்கிறீர்கள்.

வெற்றி வீடு கட்டும் திட்டம் என்பதற்கு மாற்றி, அதனுடைய அளவுக்கு, ஒரு வீட்டினுடைய அளவுக்கு 5 லட்சம் என்று உயர்த்தியிருக்கிறீர்கள். 5 லட்சம்னு உயர்த்தி, வீட்டினுடைய எண்ணிக்கையை ஆண்டிற்கு 70,000 வீடுதான் கட்டப்படும் என்பதை குறைத்திருக்கிறீர்கள். ஆக மொத்தம் 3,500 கோடிதான். நீங்க நிதி ஒதுக்கியிருப்பது 3,500 கோடி.

உங்களுக்கு என்ன மனசு வச்சு நீங்க 1 லட்சம் வீடு அதை அறிவிச்சிருந்தீங்கன்னா உங்களுக்கு பெருமையா இருந்திருக்கும். ஏன்னா நாங்க வருஷத்துக்கு 1 லட்சம் வீடு கட்டினோம், ரெண்டு வருஷத்துல 2 லட்சம் வீடு கட்டுனோம். மூன்றாவது வருஷம் 1 லட்சம் வீடுகள் அறிவிக்கப்பட்டு, 36,000 வீடுகளுக்கு அனுமதியும் வழங்கியிருக்கிறோம். வீடுகள் கட்டுகின்ற நிலைமையில் இருக்கிறது.

ஆனால், வீடுகளுடைய எண்ணிக்கை இன்றைக்கு குறைக்கப்பட்டு இருப்பது, 5 ஆண்டு காலத்தில் நீங்க மூன்றரை லட்சம் வீடுதான் கட்ட முடியும். $5 \times 70 = 350$ [ஐந்தேழ் முப்பத்தஞ்சு] தான் கட்ட முடியும். எப்படி 8 லட்சம் வீடு இன்றைக்கு கட்டி முடிக்க முடியும்?

இதுபோக, நீங்கள் வந்து இதில் வந்து முழுக்க முழுக்க பார்த்தால், அடுத்து வந்து பார்த்தீர்கள் என்றால், நாம வந்து மகாத்மா காந்தி வேலை உறுதி அளிப்புத் திட்டம்... 20 வருஷமா நடக்குது. 2006-லிருந்து இன்றைக்கு 2026 வரை.

## தமிழ்நாட்டில் – கிராமப்புறம் முழுக்க சாலைகள் அமைக்கச் சிந்தித்து- 1972ஆம் ஆண்டே திட்டம் உருவாக்கியவர் எங்கள் தலைவர், கலைஞர்!

இந்தத் திட்டம் எங்களுடைய ஆட்சிக் காலத்திலே மிகச் சிறப்பாக செயல்படுத்தப்பட்டது. நான் அமைச்சராக பொறுப்பேற்ற உடனே, ஏறத்தாழ தமிழ்நாட்டில் இருக்கின்ற அத்தனை கிராமங்களையும் கிளஸ்டர்கள் பூரா... ஏதாவது ஒரு கிராமத்தில் இருந்து 100 நாள் வேலைன்னா, இன்னொரு கிராமத்திற்கு வேன்ல 407-ல் அந்த டாடா...பஸ்ல ஏறி கூட்டுகிட்டு போவாங்க. அங்க வேலை முடிச்சுட்டு ஊருக்கு போவாங்க. இப்படிப்பட்ட நிலையை பார்த்து நான் அமைச்சரானவுடன், உடனே அதற்காக மாற்றமாகத்தான் எல்லா கிளஸ்டரும் எடுக்கணும். அப்பத்தான் இந்த 100 நாள் வேலை திட்டத்தை வெற்றிகரமாக நடத்த முடியும் என்று அதிகாரிகளுக்கு அறிவுறுத்தி, அந்த திட்டத்தை அந்த ஆண்டு நடத்தினோம்.

அப்பொழுது நடத்தின உடனே, 23-24-ல, கிட்டத்தட்ட பார்த்தீர்கள் என்றால் 13,000 சொச்சம் கோடி அந்த ஆண்டு. ஏனென்றால், மகாத்மா காந்தி வேலை உறுதி அளிப்புத் திட்டத்துல வந்து 100 சதவீத கூலியும் ஒன்றிய அரசு கொடுக்க வேண்டும்.

ஆனால், இப்பொழுது அவர்கள் புதிய ஒரு கொண்டு வந்திருக்காங்க. நீங்கள் பார்த்தீர்கள் என்றால், ஜி ராம்ஜி திட்டம்னு ஒன்னு ஒன்னு கொண்டு வந்திருக்காங்க.

இந்தத் திட்டத்துல என்னன்னா, 60% கூலி அவங்க கொடுப்பாங்களாம்... 60% கொடுப்பாங்களாம்... அது உத்தேசம்! அவங்க கொடுத்தாத் தான் போச்சு, கொடுக்கலைன்னா அதை கேட்க முடியாது ஒன்றிய அரசை.

போன ஆண்டு கூட, 25-26-ல் கூட 12 கோடி வேலைநாட்கள் கொடுத்தார்கள். நாங்க 40 கோடி வேலைநாட்களை முடித்து, இந்தியாவிலேயே முதல் மாநிலம் என்ற உயர்விற்குப் பெற்ற ஒரே மாநிலம் தமிழகம். 40 கோடி வேலைநாட்களை உருவாக்கினோம். அதுல ஏறத்தாழ 13,000 கோடி செலவழித்தோம்.

மொத்தம் இருக்கக்கூடிய அனைவருக்கும், இந்த திட்டத்திலே இடம்பெறக்கூடிய அனைவருக்கும் ஏறத்தாழ 52-லிருந்து 53 நாட்கள் வேலைநாட்கள் கொடுக்கப்பட்டது. 50-லிருந்து 52 நாட்கள் வேலை...”இதெல்லாம் நீங்க கணக்கிட்டு பார்த்தா, நம்ம வந்து 100 நாள் வேலை திட்டம்தான் பேரு. ஆனா, அதிகபட்ச வேலை கொடுத்த நாள் என்பது இந்த 13,000 கோடி கொடுத்து, 23-24-ல 40 கோடி வேலை நாட்கள். நடந்த நாட்கள் தான் 50 நாட்கள் வேலை, 50-லிருந்து 52 நாட்கள் வேலை நடந்திருக்கிறது.



இப்ப இவங்க வந்து ஒன்றிய அரசு 125 நாள் அறிவிச்சுட்டு, அவங்க வந்து 60 சதவீதம் அவங்க கொடுப்போம், நீங்க 40 சதவீதம் கொடுங்கன்னு சொல்லிருக்காங்க.

நான் உதாரணத்துக்கு சொல்றேன்... பிரதமர் வீட்டு வசதி திட்டத்திலயே வந்து அவங்க பார்த்தீங்கன்னா, மொத்தத்துக்கே 38 சதவீதம் தான் கொடுக்கறாங்க. அவங்க கொடுக்க வேண்டியது 60... 60 சதவீதம் கொடுக்கணும். ஆனா கொடுக்கறதில்லை. 38 கொடுக்கறாங்க.

### ஏட்டுச் சுரைக்காய்!

வேற நம்ம வந்து நிறைவேற்றாமல் இருக்க முடியாது. இது பாதிக்கப்பட போறது யாரு? தமிழ் நாட்டு மக்கள். ஆக, அதற்காக தமிழ்நாடு அரசு நம்ம நிதியை கொடுக்கிறோம். இப்பவும் இந்த 100 நாள் வேலை திட்டத்தை தொடர வேண்டும் என்பதற்காக வேறு வழி இல்லாமல் 60... நீங்க 60 நாங்கள் 40 கொடுத்தா நம்ம கொடுக்கலாம்னு கொண்டு வந்திருக்காங்க.

நிச்சயமாக சொல்லுகிறேன்... 125 நாட்கள் வேலையை முடித்தவர்களுக்கு நாங்கள் வந்து ‘150 வெற்றி’ என்ற ஒரு திட்டத்தை நீங்கள் அறிவித்திருக்கிறீர்கள், வரவேற்கிறேன். அறிவிங்க.

ஆனா, எல்லாருக்கும் 150 நாட்கள் கொடுக்க முடியுமா என்பதை நாம் யோசித்து பார்க்க வேண்டும். பொதுவாக வச்சு பார்க்கணும். நான் சொல்றது... இந்த திட்ட உயர்வுக்குத் தேன், அதுல 125 நாள் வேலை பார்த்து முடித்த ஏழை, எளிய மக்களுக்கு... ஏழை, எளிய மக்களுக்கு இந்த திட்டத்தில 125 நாள் வேலையை கூடுதலாக நாங்கள் கொடுப்போம். அந்த திட்டத்திற்கு பெயர் ‘150 நாள் வெற்றித் திட்டம்’ என்று வைத்திருக்கிறீர்கள்.

இதெல்லாம் வந்து பேப்பர்ல தான் இருக்கு. ‘ஏட்டுச் சுரைக்காய் கறிக்கு உதவாது’ என்பது தான் உண்மை. நிச்சயமாக இந்த விபிஜி ராம் திட்டம் என்பது எந்த அளவிற்கு நடைபெறப்போகிறது என்பது சொல்ல வேண்டும் என்றால்... கட கடன்னு உடனே ஒன்னு முடிச்சிறேங்க. ஜூலை மாதத்தில் மட்டும் சொல்றேன்...”

என்ன காரணம்னா, இப்ப 12,600 சில்லறை கோடி ஒதுக்கியிருக்கீங்க. அவங்க 7,200 கோடி கொடுத்திருக்காங்க, நீங்க ஒரு 5,057 கோடி கொடுத்திருக்கீங்கன்னு நினைக்கிறேன். ஆக மொத்தம் 12,000 சில்லறை கோடிகள்.

13,000 கோடி செலவழிச்சு, சம்பளம் அன்னைக்கு வந்து 260, 268-தான் கொடுத்திருப்பாங்க. 268-ஆ 270-ஆ கொடுத்திருப்பாங்க.

இப்ப சம்பளம் உயர்த்தப்பட்டிருக்கு. இப்படி இருக்க சூழ்நிலையில, நீங்க 13,000 கோடி செலவழிச்சு ஒரு ஆண்டில் 50 நாட்கள்தான் வேலை கொடுத்திருக்கிறோம்.

இப்ப நீங்க இன்னொன்னு... நீங்க 125 நாள் வரணும்னா, 100 நாள் கொடுக்கணும்னாலும் இன்னும் 12,000 கோடி ஒதுக்கணம். அதுக்கு உத்தேசமாக கொடுத்த... ஒன்றிய அரசு இனி 7,000 கோடி கொடுக்குதா இல்லையா தெரியல. அதே சமயத்துல 25,000 கோடி வேணும். நீங்க தயவுசெய்து 12,000 கோடிங்கிறது 100 நாளைக்கு நீங்க செய்யணும்னு சொன்னா, 25,000 கோடி வேணும்.

### நிதிநிலைச் சுமை!

அப்ப மீண்டும் நம்முடைய மாநிலத்தினுடைய நிதிநிலை சுமை அதிகமாக இருக்கின்ற இந்த காலகட்டத்திலே, இன்னும் ஒரு 5,000 கோடி நீங்க ஒதுக்கீடு செய்ய வேண்டிய அவசியம் வரும். மக்களுக்காக வேண்டி செய்யலாம், ஒன்னும் தப்பில்ல; மத்த வேலைகளெல்லாம் நிறுத்திட்டுக்கூட நீங்க செய்யலாம். நீங்க முடிவெடுங்க அதுல!

அதுக்குத்தான் சொல்றேன், எல்லாம் வந்து மக்களுக்கு வேலை கிடைத்தால் போதும். காரணம், எங்கேயும் தமிழ்நாட்டில் எந்த நதியும் ஓடவில்லை. எந்த நதியும் இல்லை தமிழ்நாட்டுல. எங்கு பார்த்தாலும் வறட்சியாக இருக்கிறது. மழைப்பொழிவு ரொம்ப குறைந்தது. எங்க மாவட்டத்திலெல்லாம் 86% பெண்கள் இதை நம்பித்தான் இருக்காங்க. நீங்க 100 நாள் வேலையை ஆரம்பிச்சாச்சுனா, பூரா எல்லாரும் வந்து நிப்பாங்க, பதிவு செய்வாங்க, வேலைக்கு வரணும்ம்பாங்க.

பெண்கள் மட்டுமல்ல, மாற்றுத்திறனாளிகள் வருவார்கள்; அதேபோல ஆண்களும் வருவார்கள். 10 தோட்டம் இருக்கும், ஒரு தோட்டத்துலக் கூட ஒரு சொட்டு தண்ணி இல்லை. 100 நாள் வேலையில வந்து காத்திருப்பதை நான் பார்த்திருக்கிறேன் நேரடியாக. எத்தனையோ விவசாயிகள்... பெரிய தோட்டங்கள் வைத்திருக்கின்றவர்கள் 100 நாள் வேலைக்கு வருவதைப் பார்க்கின்ற பொழுது கண்ணீர்தான் வரும். அந்த அளவிற்கு இந்தத் திட்டம் ஏழை எளிய மக்களுக்கு, கிராமப்புற மக்களுக்கு, வேற எந்த வேலைவாய்ப்பும் இல்லாத... இந்த வேலை ஒன்றை நம்பியிருக்கின்ற பெண்கள் 87% இருக்காங்க. பெண்கள் தான் பூரா அதுதான் நம்பியிருக்காங்க.

நீங்க 12,000 கோடி ஒதுக்கியிருப்பது சந்தோஷம். ஆனால், இதுல எவ்வளவு வேலை செய்ய முடியுங்கிறதை நீங்க நிர்ணயிச்சுக்கோங்க. 100 நாள் வேலை கொடுப்பது என்றாலே 25,000 கோடி, கண்டிப்பாக 20,000 கோடிக்கு மேல உங்களுக்கு தேவைப்படும் என்பதை நான் சொல்லி, அடுத்ததாக கிராமப்புறச் சாலைத் திட்டத்திற்கு வருகிறேன்.

நம்ம வந்து கிராமப்புறச் சாலைத் திட்டம் என்றால், தமிழ்நாட்டில் ‘72-ல வந்து கிராமத்திற்குச் சாலை அமைக்க வேண்டும் என்று சிந்தித்த ஒரே தலைவன் முத்தமிழறிஞர் கலைஞர். அவர்தான் கிராமப்புறச் சாலைத் திட்டத்தைக் கொண்டுவந்தார். வேற யாரும் கொண்டுவரல; எந்த காங்கிரஸாட்சி காலத்துலயும் கொண்டுவரல, எந்த காலத்துலயும் கொண்டுவரல. ‘72-ல கொண்டுவந்தாங்க.

### கிராமப்புறச் சாலைத் திட்டம்!

அந்தத் திட்டம் இப்ப மீண்டும் முதலமைச்சர் “கிராமப்புறச் சாலைத் திட்டம்” என்று எடுத்து, ஏறத்தாழ 8,700 கோடிக்கு மேல் செலவிடப்பட்டு, அந்தச் சாலைகள் எப்படி அமைக்க வேண்டும் என்பதை முதலமைச்சர் அவர்கள்... 15 mm இருக்கக்கூடிய சாலைகளை 20 mm உயர்த்த வேண்டும், அந்த பிட்டுமின் கான்கிரீட் என்பதை 15-ஐ 20-ஆக்கணும்.

அந்த பிட்டுமின்... பிட்டுமின் மேக்கடமை என்பதும், BMC, BMBC என்பதை மாற்றி, நெடுஞ்சாலைத் துறைக்குச் சமமாக... நெடுஞ்சாலைத் துறை வந்து உங்களுக்கு எவ்வளவு எஸ்டிமேட்ன்னு தெரியும், நீங்க ரெண்டையும் கம்பேர் பண்ணிப் பாக்கணும்.

எங்களுடைய உள்ளாட்சித் துறையில் போடப்பட்ட சாலைகள் தமிழ்நாட்டில் இருக்கின்ற கிராமத்தை இணைத்த சாலைகளைப் பார்க்க வேண்டும்! பார்த்துவிட்டுப் பேச வேண்டும்! கிராமப்புறத்திலே இருக்கின்ற மக்கள்... நம்முடைய கலைஞர் கனவில்லத்தையும், நம்முடைய முதலமைச்சர் சாலைத் திட்டத்தையும் இன்னும் மறக்க மாட்டார்கள். இப்படிப்பட்ட சாலைகள் போடப்பட வேண்டும் என்பார்கள். அந்த அளவிற்குத் தரமான சாலைகள்.

ஒரு திட்டம் தீட்டுகின்ற பொழுது 36% ‘லெஸ்’ போட்டிருக்காங்க

ஆக மொத்தம் 20,000 km நாங்க... நாங்க வந்து அந்தப் பணிகளைச் செய்திருக்கிறோம். மொத்தம் 28,600 km. பல்வேறு திட்டங்கள்ல, PMGSY எல்லாம் தமிழ்நாட்டில் முடிந்துவிட்டது. 5 km-க்கு மேலதான் போகணும் ஒன்றிய அரசின் திட்டம். ஆனால், நாங்கள் 2 km வரை போடலாம் என்று ஒன்றிய அரசிடம் அனுமதி கேட்டும் கொடுக்கவில்லை.

தமிழ்நாட்டில் PMGSY திட்டமே முடிந்துவிட்டது, 10 ஆண்டுகளுக்கு மேலாகிவிட்டது. அதெல்லாம் சீர்செய்ய வேண்டிய கட்டாயம் வருகாலத்தில் இருக்கிறது. நீங்கள் செய்வீர்கள், அதைச் செய்யுங்கள், கேட்டுச் செய்யுங்கள்.

அதேபோல PMGSY திட்டத்துல இப்ப வந்து, அந்தச் சாலைகளுடைய நீளத்தைக் குறைக்க வேண்டும். நாங்கள் தமிழ்நாட்டில் கிட்டத்தட்ட 28,600 km சாலைகள் 15,000 கோடியில் மிகத் தரமான சாலைகள் உள்ளாட்சித் துறையின் மூலமாக... நபார்டு திட்டம், PMGSY திட்டம், தமிழக முதலமைச்சரின் முதலமைச்சர் சாலைத் திட்டம்... இவையெல்லாம் மிகச் சிறந்த திட்டங்களாக மக்களால் ஏற்றுக்கொள்ளப்பட்ட திட்டங்கள் எல்லாம் இன்றைக்கு முடிவடைந்திருக்கிறது.

ஆக, சாலை மேம்பாட்டுத் திட்டத்திலே நம்ம வந்து ரொம்ப சிறப்பா பண்ணியிருக்கோம். முதலமைச்சர் அவர்கள்கூட சொன்னார்கள், அதற்கு எவ்வளவு செலவாயிற்று என்பதை நீங்கள் நெடுஞ்சாலைத் துறைக்கும், உள்ளாட்சித் துறைக்கும் நீங்கள் ஒப்பிட்டுப் பார்க்கலாம். அந்த அளவிற்குத் தரமான சாலைகளெல்லாம் நம்முடைய தமிழகத்திலே கடந்த காலத்திலே நிலைநிறுத்தப்பட்டிருக்கிறது.

இதுபோக மகளிர் திட்டத்தைப் பற்றிச் சொல்கின்ற பொழுது, 1989-ஆம் ஆண்டு முதன் முதலாக தர்மபுரி மாவட்டத்தில், சுயஉதவிக் குழு பெண்கள் தங்கள் சொந்தக் காலால் நிற்க வேண்டும் என்று நினைத்து, அந்தத் திட்டத்தை இந்தியாவிலேயே உருவாக்கிய ஒரே முதலமைச்சர் எங்கள் முதல்வர், தமிழகத்தினுடைய சிற்பி முத்தமிழறிஞர் கலைஞர் என்பதை நான் நினைவுகூர விரும்புகின்றேன்.

அவர் திட்டத்தைத் துவக்கினார். அந்தத் திட்டம் சிறப்பா நடைபெற்றது. எந்தக் கடன் வாங்கினாலும் பெண்கள் வயித்தக் கட்டி, வாயைக் கட்டிக்கூட கடனை... ஆண்களுக்கு யாரும் கடன் கொடுக்க மாட்டான், பெண்களுக்குன்னா கடன் கொடுப்பான். பெண்களுக்குக் கடன் கொடுத்தா அதை ரொம்ப சிக்கனமாக வைத்து, அந்தக் கடனைத் திருப்பி வைப்பார்கள். பால் கணக்குன்னாலும் காலையில கோடு போட்டுக்கிட்டு இருப்பாங்க கிராமங்கள்ல வீடுகள்ல. பார்க்கலாம்... என்ன கோடு போட்டுருக்குன்னு, எத்தனை லிட்டர் பீய்ச்சிருக்காங்கன்னு. அந்த அளவிற்கு ஒரு பெண்களுக்காக உருவாக்கப்பட்ட சுயஉதவிக் குழு திட்டம், they are standing on their own legs.

பெண்கள் மகளிர் அவர்கள் சொந்தக் காலால் நிற்க வேண்டும் என்பதற்காக உருவாக்கப்பட்ட அருமையான திட்டம் இன்றைக்கு இந்திய அளவிலே ஏற்றுக்கொள்ளப்பட்டிருக்கிறது. அதற்குப் பின்னால் மகளிர் திட்டம் — Women Development Corporation, Skill Development Corporation — இதெல்லாம் வந்து அதைத் தொடர்ந்து உருவாக்கிய திட்டங்கள். திறன் மேம்பாடு, அது மகளிர் மேம்பாடு... இதெல்லாம் கொண்டுவந்திருக்கீங்க.

அதே சமயத்திலே, நீங்கள் இப்போ... அதாவது எந்த ஒரு திட்டமாக இருந்தாலும் தவறு இருக்கலாம்; அதற்காக வேண்டி திட்டத்தை நிறுத்த முடியாது. இருக்கக்கூடிய அலுவலர்கள் போய்... அவங்க வந்து சோதிக்க அலுவலர்கள் நேரடியாக தேர்வு அவங்கதான் தேர்வு செய்றாங்க. நான் ஒன்னே ஒன்னு உங்களுக்கு சொல்லிறேன்.

என்னை பொறுத்தவரையில் என்னுடைய துறையிலே, இதே அவையிலிருக்கின்ற அனைத்து உறுப்பினர்களுக்கும் தெரியும், நம்ம எந்த திட்டத்தை ஆரம்பித்தாலும் எந்த எந்த கட்சியை சார்ந்தவர்கள் என்றும் பார்ப்பதில்லை. ஏன்னா வீடு கேட்டு வருகின்றவர்கள் யாராக இருந்தாலும் அவர்களுக்கு வழங்குவோம்.

ஏன்னா அது அதிமுகவாக இருந்தாலும் சரி, அது எந்த கம்யூனிஸ்ட் கட்சியாக இருந்தாலும் சரி, காங்கிரஸ் இயக்கமாக இருந்தாலும் சரி, எந்த இயக்கமாக இருந்தாலும் சரி, எந்த ஜாதியை சார்ந்தவர்களாக, எந்த மதத்தைச் சார்ந்தவர்களாக இருந்தாலும் சரி, யாரு வந்தாலும் சரி, வீடு கலைஞர் கனவில்லத்தில் வீடு கேட்டு வந்தவர்களுக்கு ஒரு ஒன்றியத்தில எந்தெந்த ஒன்றியத்தில் வந்தாங்களோ, அத்தனை ஒன்றியத்திலும் யார் வீடு கேட்டு வந்தாலும் அவர்களுக்கு இல்லை என்று சொல்லக்கூடாது. தேர்வு செய்வதற்கு ஒரு கமிட்டி இருக்கிறது.

### கட்டுமானப் பணிகள்!

அந்த... நீங்க அமைச்சர் சொல்வதிலே, இல்ல... பெனிஃபிஷியரிய பெனிஃபிஷியரி... இப்ப IRDP இருக்குன்னு வச்சுக்கோங்க, லோன் கொடுக்கிறோம். அதுல பெனிஃபிஷியரிய தேர்வு செய்வது அதற்கு ஒரு கமிட்டி இருக்கிறது. அந்த கமிட்டிதான் அதை தேர்வு செய்யுது.

நம்ம சுற்றுப்புறச் சூழல் துறை அமைச்சர் சொன்னார், ஜல்லியெல்லாம் விலை அவர்கள் குறைத்துக் கொடுத்ததற்கு காரணம் இதுவல்ல. இயற்கையாகவே விலைவாசிகள் குறைவாக இருந்தது. இப்ப எல்லாமே அவங்க இஷ்டம் போல ஏத்திக்கிட்டே போறாங்க. அதை கட்டுப்படுத்தணும். விலைவாசி ஏற்றத்தைக் கட்டுப்படுத்த வேண்டும், அதுதான் எங்களுடைய கோரிக்கை. காரணம், அரசிற்கு ஏற்படுகின்ற இழப்புகளையெல்லாம் நாங்க குறைக்கிறோம்னு சொல்றீங்க. அது குறைப்பதற்கு இது உதவியாக இருக்கும். எதுவாக இருந்தாலும் இது குறைப்பதற்கு உதவியாக இருக்கும்.

தொடர்ச்சி 6 ஆம் பக்கம்